[සියලු ම හිමිකම් ඇවිරිණි]
[முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

# இலங்கை வெளிநாட்டுச் சேவையின் III ஆந் தரத்திற்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை, 1997 ஒக்ரோபர்

# Open Competitive Examination for Recruitment to Grade III of the Sri Lanka Foreign Service - November 1997

(01) பொது வினாத்தாள் — General Knowledge — மூன்று மணித்தியாலங்கள் — Three hours

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

---

1. "திருமணங்களின் நிரந்தரத்தன்மை, சட்டபூர்வமான பிறப்புகள் ஆகியவற்றின் வீழ்ச்சியுடன் பிள்ளைகளிடத்தே அடிப்படை சமூக விழுமியங்கள் பலவற்றை மனதில் பதியச்செய்வதில், குடும்பத்துக்கு இருந்த இடம் இனிமேல் இல்லையென்றாகியுள்ளது." ஆராய்க.

2. "மதமானது, மக்களை ஒன்றுபடுத்தி கூழு இயக்கப்பாட்டுக்கு அவர்களைத் தயாராக்குகிறது. ஆயினும் மதமானது வன்முறையான முரண்பாடுகளுக்கு வித்திடும் ஒன்றாகவும் மாறியிருக்கிறது." விளக்குக.

3. 1977 இல் இலங்கையில், ஒரு சந்தைமையப்படுத்திய அபிவிருத்தி உபாயத்தின் அறிமுகத்தோடு சுகாதாரத்துறைக் கொள்கைகள் சந்தைப்போக்குகளினாலேயே (market trends) ஆளப்படவேண்டுமென்று எதிர்பார்க்கப்பட்டது. சமூகத்தின் சுகாதார, போஷாக்கு மீதான இத்தகைய கொள்கை மாற்றத்தின் விளைவுகளைக் கலந்துரையாடுக.

4. பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்டுள்ள தீர்வுப்பொதியானது, இலங்கையில் நிலவும் போர்ச் சூழ்நிலைக்கு ஒரு நிரந்தரத் தீர்வைக் கொண்டுவருமா என்பது பற்றிய உமது கருத்தை எழுதுக.

5. "போதைமயக்கம், நிரம்பிய போதையருந்தும் பழக்கம் ஆகிய இரண்டுமே, குடும்பங்களிலும் பிள்ளைகளிடத்தும் ஏற்படுத்தப்படுகிற பரந்துபட்ட தொடர் பிரச்சினைகளோடு இணைந்துள்ளன." கருத்துரை வழங்குக.

6. "கொழும்பு பங்குச்சந்தையில் (Colombo Stock Market) நிரற்படுத்தலானது, கம்பனி விரிவாக்கத்துக்கான நிதிகளைத் திரட்டவும் அல்லது புதிய முயற்சிகளை ஆரம்பித்து அதன் மூலம் புதிய தொழில் வாய்ப்புகளை உருவாக்கவும் கம்பனிகளுக்கு ஆற்றலைத் தருகின்றது." கலந்துரையாடுக.

7. "நாட்டில் வதியாதவர்களான மக்களுக்கு பொருட்களையும் சேவைகளையும் விற்பனைசெய்வதிலிருந்தே உல்லாசத்துறையின் ஏற்றுமதி சாத்தியம் உருவாகின்றது. உற்பத்திப் பொருட்கள் அல்ல- நுகர்வோனே இடங்களை மாற்றுகின்றான் என்ற உண்மையிலேயே அதன் வேறுபடுகிற சிறப்பியல்புகள் தங்கியுள்ளன" இக்கூற்றினை நீர் ஏற்றுக்கொள்கிறீரா அல்லது மறுக்கின்றீரா என்பதை காரணங்களுடன் விளக்குக.

8. ஐ.நா. பாதுகாப்புச் சபையின் வீட்டோ (Veto) அதிகாரம்பற்றி விளக்குக. இத்துணை சர்ச்சைக்குரிய ஒரு விடயமாக அது விளங்கிக் கொண்டிருப்பது ஏன்

9. "உலக வங்கியானது 'சிறந்த ஆட்சி' (Good governance) என்ற கவர்ச்சிக் குறிக்கோளின் கீழ் வளர்முக நாடுகளின் மீது அரசியல் சீர்திருத்தங்களைத் திணிக்கின்றது. எனினும் உண்மையில் அது இவ்வரசியல் சீர்திருத்தங்களை, சிறிதளவு மக்கள் ஆதரவைப் பெற்ற பொருளாதாரத் திட்டங்கள் ஊடாகசெயற்படுத்தும்போது அதன் விளைவாக அமைவது, பொருளாதாரச் சமத்துவமின்மையின் அதிகரிப்பே ஆகும்.
கருத்துரை வழங்குக.

10. தொகையாலும் (type) வகையாலும் பாரிய அளவில் அதிகரிப்புக்குள்ளாகும் குப்பைகளை (garbage) அகற்றுவதும், மீளப் பயன்கற்றுக்குள்ளாக்குவதும் இன்று ஒரு தலையாய பிரச்சினையாகியுள்ளது. வினைத்திறனும் பயன்தருதன்மையுமிக்கதொரு குப்பை முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டத்தை விருத்திசெய்வதில் சம்பந்தப்படுகின்ற பல்வேறு நெருக்கடிகளை சுருக்கமாக விபரிக்குக.